**OPEN ACCESS**

Volume: 5

Issue: 2

Month: October

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.07.2020

Accepted: 29.08.2020

Published: 01.10.2020

Citation:
Selvam, T. (2020). The Role of Hair in Tamil Society. *Shanlax International Journal of Tamil Research, 5*(2), 55–60.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i2.3482

*Corresponding Author:

tsaramani@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Role of Hair in Tamil Society

**T. Selvam**

*Assistant Professor, Tamil Department*

*S S Duraisamy Nadar Mariammal College, Kovilpatti, Tamil Nadu, India*

https://orcid.org/0000-0001-6677-7750

**Abstract -** Intertwined in both joyous and sorrowful experiences of Tamil people, the hair of women registers a special status in the Tamil society since time immemorial. Tamil people's beliefs, customs and religious practices bear witness to the primary role played by hair in the lives of Tamil women.While well groomed hair is seen as a good omen, women with loose and ungroomed hair are looked as bad omen. Well groomed hair of Tamil women symbolises their families' well-to-do status. The long and decorated hair of Tamil women had their admirers and husbands spell-bound. The spellbound Thalaivan even forgets to earn money which is the duty of a male. Instead, he celebrates the beautiful hair of his Thalaivi. In the same way, Thalaivi forgets to care her hair when her Thalaivan separates from her. Thalaivi goes to extreme of sacrificing her hair when her Thalaivan dies. Tamil society celebrates hair in a special way. This article sheds light on the special status given to hair in the Tamil society

**Keywords:** Sangam Literature, Make-up, Thalaivan, Thalaivi, Admirer, Sacrificing, Grooming, Loose Hair.

**References**

1. Puliyur Kesigan, Natrinai Theliurai, 42: (5-11).
2. Nagarajan, V., Kurunthogai Moolamum Uraiyum, 225: 2 (5-7).
3. Jeyabal, R., Akananuru, Part 2, 223 (14-15).
4. Viswanathan, A., Kalithogai Moolamum Uraiyum, 72: (19-20).
5. Viswanathan, A., Kalithogai Moolamum Uraiyum, 87: (1-2).
6. Jeyabal, R., Akananuru, Part 1 46: (7-10).
7. Jeyabal, R., Akananuru, Part 1 150 (1-2).
8. Jeyabal, R., Akananuru, Part 2 276 (11-12).
9. Viswanathan, A., Kalithogai Moolamum Uraiyum, 104: (18-21).
10. Manikavasagan, G., Purananuru, Moolamum Uraiyum, 25 (12-14).
11. Manikavasagan, G., Purananuru, Moolamum Uraiyum, 147 (6-9).
12. Manikavasagan, G., Purananuru, Moolamum Uraiyum, 260 (3-5).
13. Nagarajan, V., Pathupattu Paguthi 2, Pattinapalai, 218 -220.
14. Puliyur Kesigan, Natrinai Theliurai, 270: (9-10).

# சங்க காலச் சமுதாயத்தில் கூந்தல்

*முனைவர் த. செல்வம்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
செ.சீ.துரைசாமி நாடார், மாரியம்மாள் கல்லூரி, கோவில்பட்டி

***ஆய்வுச் சுருக்கம்:*** *பண்டைக்காலச் சமுதாயம் முதல் இன்றைய நடைமுறை வாழ்வியல் வரை சமுதாயத்தில் கூந்தல் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. கூந்தல், மாந்தர் உடலுடன் மட்டுமல்லாமல் பல்வேறு வகையில் அவர்களின் வாழ்க்கையுடன் இணைந்து, இன்ப, துன்பங்களில் இரண்டறக்கலந்து அழகிய காட்சிப்பொருளாக உள்ளது. எண் சாண் உடம்புக்கு தலையே பிரதானம் என்ற மொழிக்கிணங்க மனித உறுப்புகளுள் முதன்மையானது தலை. அத்தலையில் இருக்கக்கூடிய கூந்தல் மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், கடவுள் வழிபாட்டு சடங்குகள், நோன்புகள் என அனைத்திலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. தலைவன்–தலைவியின் களவு, கற்பு என இரண்டு வாழ்க்கை முறையிலும், இன்பமான நேரங்களில் கூந்தலை அழகுபடுத்திக் கொள்வதும், மணமூட்டி அணிகள், மலர்கள் எனச் சூடி ஆனந்தப்படுவதும் உண்டு. தலைவன் பிரிவின் போது கூந்தலைப் பேணாமல் அதனை அழகுபடுத்தும் செயல்களையும் தலைவி செய்யாமல் இருப்பதை பழக்கமாகக் கொண்டிருந்தனர். சமுதாயத்தில் கூந்தல் பெற்றுள்ள முக்கியத்துவத்தையும், அது பற்றிய கருத்தாக்கங்களையும் இக்கட்டுரை விளக்குகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *கூந்தல், சங்க இலக்கியம், ஒப்பனை, பழக்கவழக்கங்கள், கடவுள் வழிபாட்டு, சடங்குகள், நோன்புகள், களவு, கற்பு*

## நீராட்டப் பெறாத கூந்தல்

வினைமுற்றி மீளும் தலைவனது வரவை இளையர் முன்சென்று அறிவித்தவுடன் தலைவி அதுவரையிலும் நீராட்டப் பெறாத கூந்தலை மாசின்றி கழுவிக் கைகளால் அழகுற புனைந்தாள். செறிந்த கூந்தலில் சில மலர்களை அணிந்தநிலையில் தன் மெய்வருந்தும்படியாகத் தலைவனை அணைத்துக் கொண்டாள். இதனை

**“மண்ணாக் கூந்தல் மாசு அறக் கழீஇ**
**சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய”**

என்ற பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது.[1]

அக்காலச் சமுதாயத்தில் தலைவன் வினைமேற் சென்ற காலத்தில் தலைவி கூந்தலை நீராட்டாமல் மலர்கள் அணியாமல் வாடியிருத்தலும் தலைவன் வந்த பின்பு நீராடி கூந்தலை ஒப்பனை செய்து மகிழ்ந்திருத்தலையும் அறிய முடிகிறது.

## தலைவனுக்குரிய கூந்தல்

வரைவிடம் வைத்துப் பிரியும் தலைவனிடம் நாடனே உனக்கு நான் செய்த நன்றியை மறந்துவிடாது இருப்பாயானால் இத்தலைவியது மயிற்பீலியைப் போன்ற தழைத்த மெல்லிய கூந்தல் உனக்கே உரியனவாம் எனத் தோழி கூறுகிறாள். இதனை

**“............மென் சீர்க்**
**கலிமயிற் கலாவத்தன்ன இவள்**
**ஒலிமென் கூந்தல் உரியவால் நினக்கே”[2]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

பெண்ணின் கூந்தலைத் தொடும் உரிமை அவளின் கணவனுக்கு மட்டுமே உரியது. ஆதலால் களவிலே ஈடுபட்ட தலைவன்

தலைவியின் கணவனாக வேண்டும் என தோழி அறிவுறுத்துகிறாள். "உரிய" என்ற சொல் மணம் முடித்து தலைவியின் கூந்தலும் அவளோடு இல்லறம் நடத்தும் உரிமையும் தலைவனுக்கு இருப்பதை உணர்த்துகிறது.

**கூந்தல் துயில்**

தலைவன் தலைவியின் ஐந்து பகுப்பாகப் புனையப்பட்ட அழகிய கூந்தலைப் பாயலாகக் கொண்டு இன்துயில் கொண்டான். பின்பு பொருள் ஈட்ட வினைமேற் சென்றான். பிரிவைத் தாங்காத தலைவியிடம் தோழி கூந்தற் துயிலுக்காகவே தலைவன் விரைந்து வருவான் என்றும் பொருளைவிட தலைவியின் கூந்தல் பாயலை மறக்க இயலாதவனாகப் பிரிவை நீட்டிக்காமல் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள். இதனை

**"மடங்கா உள்ளமொரு மதிமயக்குறா அ**
**பொருள் வயின் நீடலோ இலர் – நின்**
**இருங் ஐங்கூந்தல் இன்துயில் மறந்தே"[3]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

அக்காலச் சமுதாயத்தில் பெண்களின் கூந்தலைப் பாயலாகக்கொண்டு ஆண்கள் துயின்றதையும், தான் ஈட்டும் பொருளை விட கூந்தல்துயிலைப் பெரிதும் விரும்பியதையும் அறிய முடிகிறது.

**பரத்தைக்கு கூந்தல் முடித்தல்**

தலைவன் பரத்தையின் பூக்கள் நிறைந்த கூந்தலை வகிர்ந்து சீவி, சிக்கெடுத்து முடித்தான். அப்போது அம்முடியிலிருந்து பூந்துகள்கள் அவன் மேல் வீழ்ந்து கிடந்தன. இதனை

**"களிப்பட்டார் கமழ்கோதை கயம்பட்ட வருவின் மேல்**
**குறிபெற்றார் குரல் கூந்தற்கோடுளர்ந்த துகளினை"[4]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

ஆண்கள் தலைவியின் கூந்தலையோ அல்லது பரத்தையின் கூந்தலையோ வகிர்ந்து முடித்தலுமான செயல்களை விரும்பி செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**கூந்தலைத் தீண்டாதே தலைவி**

பரத்தையிடம் சென்று வந்த தலைவனிடம் ஊடல் கொண்ட தலைவி தன் கூந்தலைத் தீண்டாதே! என்று கூறுகிறாள் இதனை

**"ஒரு நீயெங் கூந்தல் கொள்ளல்யா நின்னை**
**வெரூஉ துங் காணுங் கடை"[5]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

தலைவன் தலைவியின் கூந்தலைத் தொட்டவுடன் விரைந்து செல்லும் அச்சத்துடன் (வெரூஉதல்) மோகம் ஏற்பட்டுவிடும், மோகம் ஏற்பட்டால் பரத்தமை தலைவனுடனான ஊடல் நீங்கிவிடும். ஆகையால் தலைவி தன் கூந்தலைத் தீண்டாதே ! என்றாள்

பரத்தமை ஒழுக்கத்தில் சென்ற தலைவன், தலைவியின் கூந்தலைத் தீண்டி அவளுடைய மனநிலையை மாற்றும் இயல்புடையவராக இருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**பரத்தை மணம்**

மழைக்கால மேகம் போல கருமையான, கூந்தலையுடைய பரத்தையைத் தலைவன் தன் மனையிற் கொணர்ந்து திருமணம் செய்து கொண்டான். அவளின் கூந்தல் நீண்டதும், ஒளிரும்தன்மையுடையதாகவும் இருந்தது. இதனை,

**....... ஒளிரும் தாழ் இருங்கூந்தல்**
**பிறரும், ஒருத்தியை நம் மனைத் தந்து**
**வதுவை அயர்ந்தினை என்ப"[6]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

பரத்தையாக இருந்தாலும் அவளின் கூந்தற் சிறப்பின் காரணமாக அவளை மணந்து கொண்டதால் கூந்தலின் சிறப்பை

உணர முடிகிறது. சமுதாய வாழ்வியலில் ஆடவரைப் பிணிக்கும் கயிறாகவே பெண்களின் கூந்தல் இருந்ததை அறிய முடிகிறது.

**அருங்கடிப்படுத்துதல்**

தலைவியின் கூந்தல் பின்னும்படியாக நீண்டு வளர்ந்தும், நெளிந்த தன்மை உடையதாகவும் இருந்தது. மேலும் தலைவியின் பிற உடல் வனப்புகளையும் பார்த்து அன்னை அவள் எங்கும் செல்ல இயலாத வகையில் காவலில் வைத்தாள். இதனை

**"பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென**
**ஆகத்து அரும்பிய சுணங்கும், வம்புவிட"[7]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

தலைவி நீண்ட பின்னுதலை உடைய வளர்ந்துவிட்ட கூந்தலையும், அழகும் உடையவளாக இருப்பதால் களவு ஒழுக்கத்தில் ஈடுபடாதிருக்க அரிய காவலில் வைக்கப்பட்டாள். களவு ஏற்படும் காலத் தினை கூந்தலை வைத்துக் கணக்கிட்டு பெண்ணைப் பாதுகாத்திடும் சமுதாயச் சூழலை அறிய முடிகிறது.

**கூந்தல் சிறை**

பரத்தை தனது அழகிய தோளைக் கட்டுந்தறியாகவும், தனது கூந்தலைக் கயிறாகவும் கொண்டு தலைவனைக் கட்டி அவன் மார்பினைச் சிறைப்படுத்துவேன் எனச் சூளுரைக்கிறாள். இதனை

**"தோள்கற் றாகக் கூந்தலின் பிணித்து, அவன்**
**மார்புகடி கொள்ளேன் ஆகின்"[8]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

அழகிய கூந்தல், ஆண்களின் மனத் தினை கட்டும் கயிறாக, இருப்பதை அறிய முடிகிறது. கூந்தல் அழகு ஆண்களைச் சிறைப்படுத்திவிடும் என்ற நம்பிக்கையுடனே பரத்தை சூளுரைக்கிறாள். இதன்மூலம் அழகிய கூந்தலே ஆடவரின் பெருவிருப்பமாக இருந்ததை அறிய முடிகிறது.

**ஏறுதழுவல் - கூந்தற் சிறப்பு**

கூரிய கொம்பினை உடைய கரிய காளையின் சீற்றத்திற்கு அஞ்சாமல் அதனை அடக்குபவன், இளமையின் அழகுடன் ஒளிரும் தலைவியின் வாருதலுற்ற கூந்தலிலே துயில் பெறுவான் என்பது ஆயர் அறிவிப்பாக இருந்தது. இதனை

**"... முள் எயிற் றேஎ றிவளைப் பெறுமிதோர்**
**வெள் ஏற்று எருத்தடங்கு வான்**
**ஒள்ளிழை, வாருது கூந்தல் துயிர்**
**பெறும்வை மருப்பிற்**
**காரி கதனஞ்சான் கொள்பவன் ஈரரி"[9]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

காளையை அடக்கினால் திருமணம் - என்பதில் ஆணின் வீரம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. அதனைப்போல் கூந்தற் சிறப்பினைக் காரணமாக வைத்துப் பெண் குறிப்பிடப்படுகிறாள். கூந்தலின் இனிய துயிலை ஆடவர், பெரும் பேறாகக் கருதியதால் "ஏறுதழுவலில்" ஈடுபட்டனர். அக்காலச் சமுதாய பழக்கவழக்களில் கூந்தல் முக்கிய இடத்தைப் பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

**கூந்தல் களைதல்**

பாண்டியன் நெடுஞ்செழியனின் பகைவர்கள் அவனுடன் போரிட்டு இறந்தனர். அதனால் அவர்தம் மனைவியர் கைம்மை நோன்பு மேற்கொண்டு தங்களுடைய கருமணல் போல் படர்ந்த கருங்கூந்தலைக் களைந்து கொண்டு கண்ணீர் விட்டனர். இதனை

**"ஒண் நுதல் மகளிர் கைம்மை கூர**
**அவிர் அறல் கடுக்கும் அம்மென்**
**குவை இரும் கூந்தல் கொய்தல் கண்டே"[10]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

கூந்தலை அழகுற ஒப்பனைசெய்வதும், அணிகலன்கள் அதிலே புனைவதும், மணப்பொருட்களைப் பூசியும், புகையுட்டியும் மணமுடையதாக்கிப் பலவண்ணங்களிலும்,

மணத்திலும் சிறந்த மலர்களை அக்கூந்தலிலே சூடுவதும் கணவனுக்காகவே. அக்கணவன் இறந்து படும்போது தன்னுடைய கூந்தலைக் கலைந்து கொண்டு கைம்மை நோன்பினை மேற்கொண்டுள்ளனர். இத்தகைய கூந்தலை நீக்கும் செயலானது அரசி முதல் சாதாரண பெண் வரை அக்காலச் சமுதாயத்தில் அனைவரிடமும் இருந்த பொதுவான பழக்கமாக இருந்ததை அறிய முடிகிறது.

**புலவரின் பரிசு**

கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பேகன் அவன் மனைவி கண்ணகியை விட்டு வேறு பெண்ணைத் தேடிச்சென்று விட்டான். அவளோ கணவன் பிரிந்த துயரால் தன் கூந்தலைப் பேணாமல் விட்டுவிட்டாள்.

பேகன் திரும்பி வந்தால் மட்டுமே கண்ணகியின் மயிலின் தோகை போன்ற நீண்ட கூந்தல் நீலமணி போல ஒளி வீசும். ஆகையால் கண்ணகியின் வறண்ட கூந்தல் கழுவிச் சுத்தப்படுத்தப்பட்ட நீலமணி போல ஒளி வீசவும், கூந்தலில் புதுமலர் சூடிக்களிக்கவும் இப்போழுதே அவளிடம் பேகன் சென்று சேர வேண்டும். அதுவே பேகன் தமக்களிக்கும் சிறந்த பரிசிலாகும் எனப் பெருங்குன்றூர்க்கிழார் பேகனிடம் வேண்டிக் கொண்டார். இதனை

**“நெய்யொடு துறந்த மை இரும் கூந்தல்**
**மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்**
**புதுமலர் கஞல இன்று பெயரின்**
**அதுமன்எம் பரிசில் ஆவியர் கோவே”[11]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

அரசனிடம் பரிசில் பெற விரும்பி பாடல் புனையும் புலவர் பெருமக்கள் பரிசிலைவிட அரசனின் மனை வாழ்வும் சிறக்க வேண்டும் என்றே எண்ணினார். கண்ணகியின் கூந்தலுக்கு உரியவனான பேகன் அவளுடன் சேர்வதால் அவளின் கூந்தல் பொலிவு பெறும். அதுவே தமக்கான மிகப்பெரிய பரிசிலாகும் என்று கூறுவது அக்காலப்புலவர்களின்பெருந்தன்மையைக் குறிப்பிடுகிறது. இதன்மூலம் வாழ்வியலின் முக்கிய அங்கமாக கூந்தல் இருந்ததனை பெற்றிருந்ததனை அறிய முடிகிறது.

**விரித்த கூந்தல் - தீ நிமித்தம்**

பாணன் ஒருவன் தலைவனைக் காணப் புறப்பட்டளவில் அவன் மனைவியருள் ஒருத்தி விரித்த கூந்தலோடு எதிர் வருகிறாள். அதனை தீ நிமித்தமாகக் கொண்டு பாணன் தெய்வத்தைத் தொழுதான். பின் அத்தலைவனைக் காண மாட்டேனோ? என்று எதிர் வருவோரை வினவிச் சென்றான். இதனை

**“ . . . . . . . . . மனையோள்**
**உளரும் கூந்தல் நோக்கிக் களர**
**கற்றி நீழல் கடவுள் வாழ்த்திப்”[12]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

மகளிரின் கூந்தலை விரித்து, பாயலாக்கி அதில் இன்துயில் பெற்று இன்புறுதலும், நற்காரியங்களுக்குச் செல்லும்போது அக்கூந்தலையே விரித்தநிலையில் பெண் எதிர்பட்டால் தீ நிமித்தமாகக்கொண்டு மனம் கலங்குவதுமான வழக்கம் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**நீண்ட கூந்தலால் செலவழுங்குதல்**

குறையாத செல்வவளமுடைய காவிரிப்பூம்பட்டினமே தனக்கு உரிமையாகக் கிட்டுவதாயினும், நீண்ட கரிய கூந்தலை உடைய தலைவி தனித்திருக்க அவளை விட்டு வினைமேற் செல்ல இயலாது எனத் தலைவன் தன் மனதிடம் கூறுகிறான். இதனை

**“முட்டாச்சிறப்பின் பட்டினம் பெறினும்**
**வார் இருங்கூந்தல் வயங்கு இழை ஒழிய**
**வாரேன் வாழிய நெஞ்சே!”[13]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகிறது.

தலைவியின் நீண்ட கரிய கூந்தல் அழகினாலும், அவள்மேல் தலைவன்

கொண்ட நீங்காத அன்பினாலும், பொருள் ஈட்டச் செல்லாமல் அவளுடனே இருந்தான். இச்செயல் அவனுடைய அவல நிலையை வெளிப்படுத்துவதாகவும், ஆண்மைக்கும், கடமையுணர்விற்கும் இழுக்காகவும் ஆகிவிடும். இருப்பினும் பொருளைவிட தலைவியின் கூந்தல் தலைவனின் பெருவிருப்பத்திற்குரிய ஒன்றாக இருந்ததனை அறிய முடிகிறது.

### கூந்தல்கயிறு

நன்னன் என்ற அரசன் தன் பகையரச னைப் போரில் கொன்று அவர்தம் உரிமை மகளிரின் கூந்தலைக் கொய்து அவற்றால் கயிறு திரித்து அக்கயிற்றால் அப்பகைவரின் யானைகளைப் பிணித்துக் கொணர்ந்த செயல் மிகக் கொடியதாகும். இதனை

**"வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்**
**கூந்தல் முரற்சியின் கொடிதே"[14]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

பண்டைக்காலத்தில் பனையரசனின் உரிமை மகளிரின் கூந்தலைக் கொய்து, அக்கூந்தலையே முறுக்கிக் கயிறாக்கி, அக்கூந்தல்கயிறைக் கொண்டு யானைகளைக் கட்டி கொணர்ந்துள்ளனர். கூந்தல்கயிறு தேயாத தன்மை உடையதாக இருந்ததால் இவ்வாறான கொடிய செயலைச் செய்துள்ளனர். இதன்மூலம் அக்காலப் பெண்களின் இழிநிலையை அறிய முடிகிறது.

### முடிவுரை

பண்டைக்காலம் முதல் இன்று வரை பெண்களின் கூந்தல், மங்கலமான, புனிதமான ஒன்றாகக் கருதப்படுகிறது. கூந்தலையும், பெண்களையும், முன்னோர்கள் ஒன்றாகக் கருதினர். அதனால்தான் கூந்தலைத் தொடும் உரிமை கணவனுக்கு மட்டுமே உள்ளது என்றனர். கணவன் உடன் இருக்கும்போது மட்டும் கூந்தலுக்கு நறுமணமூட்டி, வகிர்ந்து வாரி மலர்ச்சூடி கூந்தலை அழகுபடுத்திக் கொள்கிறார்கள்.

தலைவன் பிரிவின்போதும், மறைந்த பின்னும் உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கும் மலர் சூடுதலைத் தவிர்க்கிறார்கள். தலைவன் மறைந்த பின் கைம்மை நோன்பிருக்கும் பெண்கள் தங்கள் கூந்தலை மழித்துக் கொள்கிறார்கள். பெண்கள் நீண்ட கூந்தலை மெல்லணையாகக்கொண்டு இன்துயில் கொள்வதும், அந்த இனிய துயிலை மறக்க இயலாமல் செலவழுங்குதலும் ஆடவர் செயலாக இருந்துள்ளது. இவை சமுதாயத்தில் கூந்தலின் முக்கியத்துவத்தையும், ஆடவரின் கூந்தல் மீதான பெருவிருப்பத்தினையுமே காட்டுகிறது.

### அடிக்குறிப்புகள்

1. புலியூர்க்கேசிகன், நற்றிணை தெளியுரை, 42 : (5-11)
2. வி.நாகராசன், குறுந்தொகை மூலமும் உரையும், 225 : 2(5-7)
3. இரா. செயபால், அகநானூறு பகுதி 2, 223 (14-15)
4. அ. விசுவநாதன் கலித்தொகை மூலமும் உரையும், 72: (19-20)
5. அ. விசுவநாதன் கலித்தொகை மூலமும் உரையும், 87: (1-2)
6. இரா.செயபால், அகநானூறு பகுதி 1, 46 : (7-10)
7. இரா.செயபால், அகநானூறு பகுதி 1, 150 (1-2)
8. இரா. செயபால், அகநானூறு பகுதி 2, 276 (11-12)
9. அ. விசுவநாதன், கலித்தொகை மூலமும் உரையும், 104 : (18-21)
10. ஞா. மாணிக்கவாசகன், புறநானூறு மூலமும் உரையும், 25 (12-14)
11. ஞா. மாணிக்கவாசகன், புறநானூறு மூலமும் உரையும், 147 (6-9)
12. ஞா. மாணிக்கவாசகன், புறநானூறு மூலமும் உரையும், 260 (3-5)
13. வி.நாகராசன், பத்துபாட்டு பகுதி 2 பட்டினப்பாலை, 218 -220
14. புலியூர்க்கேசிகன், நற்றிணை தெளிவுரை, 270 : (9-10)